பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 06 திங்கட்கிழமை (22-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 283

## உலர் உணவு விநியோகத்தில் அடுத்த ஆண்டு முதல் வெட்டு

கொழும்பு, செப். 22

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் உலர் உணவு விநியோக நிவாரணம் அடுத்த வருடம் முதல் குறைக்கப்படலாம் எனத் தெரிய வருகிறது.

இந்த நிவாரணத்தை வழங்கி வரும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கான வரவுசெலவு திட்ட ஒதுக்கீட்டில் அடுத்த வருடம் பாரிய வெட்டு இடம் பெற்றுள்ளதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

தொடரும் யுத்தத்தினால் பொது இடங்களிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள இடம் பெயர்ந்தவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்பட்டு வரும் நிவாரணத்தைக் குறைக்க வசதியாக, அந்த மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த முயற்சி எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் 1 லட்சத்து 80 ஆயிரத்து 278 குடும்பங்களைச் சேர்ந்த 7 லட்சத்து

[8 ஆம் பக்கம் பார்க்க]

### புலிகளின் ஊடுருவல் செய்தியை அடுத்து

## அமைச்சர்களின் பாதுகாப்பு இரண்டுமடங்காக அதிகரிப்பு

கொழும்பு, செப். 22

கொழும்பு நகருக்குள் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் தலைமறைவானதாகக் கிடைத்த தகவல்களையடுத்து, அமைச்சர்கள் உட்பட அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் பணிப்பின் பேரிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-150-3)

# அதிகாரப்பரவலாக்கல் யோசனை: ஒரு வார காலத்தில் இறுதி முடிவு!

## அமைச்சரவை 29 இல் விசேடமாக கூடுகிறது

கொழும்பு, செப்ரெம்பர் 22

**அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனை குறித்து அடுத்த ஒருவார காலத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும். எதிர்வரும் 29 ஆம் திகதி இதற்காக அமைச்சரவை விசேடமாகக் கூடுகிறது.**

இன்று முதல் தொடராகக் கூடவிருக்கும் அமைச்சரவையின் முக்கிய இறுதிக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறும் என்றும்—

அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான முக்கிய முடிவு

[8 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



கடைசியில இடங்கள் பார்த்ததாகத்தான் முடியப் போகுது போல ரணிலின் பயணங்கள்...!

## ரணில் இந்தியா செல்கிறார்

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அரசின் அழைப்பின் பேரில் அடுத்த மாத ஆரம்பத்தில் இந்தியாவுக்கு செல்லவிருக்கிறார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ரணிலுடன் இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் பேச்சு நடத்துவார்.

அந்தப் பேச்சுக்களின் போது அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான ஐ.தே.கவின் நிலைப்பாடு வெளிவரும் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஐ.தே.க. இன்னும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே பிரிட்டிஷ் அரசின் அழைப்பை ஏற்று ரணில் பிரிட்டன் சென்று திரும்பியது தெரிந்ததே.

(இ-150-3)

## சீனக்கப்பல் முற்றாக கடலில் மூழ்கியது!

### மீட்கும் முயற்சி தோல்வி

கொழும்பு, செப். 22

கடந்த 10 ஆம் திகதி புல்மோட்டைப்பகுதியில் நங்கூரமிட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளான ''எம். வி. கோடியாலைட்'' என்னும் சீனக் கப்பல் முற்றாக கடலில் மூழ்கிவிட்டதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் ஏற்றப்பட்ட 26 ஆயிரத்து 235 மெற்றிக்தொன் இல்மனைட்டை இறக்கிவிட்டு கப்பலை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இரண்டாயிரம் மெற்றிக்தொன் இல்மனைட் மட்டும் இறக்கப்பட்ட நிலையில் கப்பல் மூழ்கிவிட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மோட்டார்லோஞ்சர்களை கண்டுபிடித்து அழிப்பதற்கு முயற்சி!

கொழும்பு, செப். 22

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் மோட்டார் ஷெல் தாக்குதல்களைத் தடுக்க அவர்களின் மோட்டார் நிலைகளைக் கண்டு பிடிக்கும் கருவிகள் உடனடியாக இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று இராணுவ உயர் மட்டத்திடம் கோரப்பட்டுள்ளது என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளிடம் படையினர் மீது மோட்டார் தாக்குதல் நடத்தக் கூடிய 50 மோட்டார் லோஞ்சர்கள் உள்ளன.

அவற்றில் ஏழு அல்லது எட்டு லோஞ்சர்கள் ஒன்றாகப் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் பல கோணங்களில் இருந்து தினமும் ஆயிரக் கணக்கான மோட்டார் ஷெல்களை விடுதலைப் புலிகள் படையினர் மீது ஏவுகின்றனர்.

எந்த இடங்களில் அவர்களின் இந்த மோட்டார் நிலைகள், லோஞ்சர்கள் உள்ளன என்பதை அறிய முடியவில்லை.

ஆகவே அந்த நிலைகளைக் கண்டறிந்து அழிக்க வேண்டியதன் அவசியத்தை சிரேஷ்ட அதிகாரிகள் வலியுறுத்தி, அந்த நிலைகளை அறியும் கருவிகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யுமாறு கேட்கிறார்கள்.

இதே வகையான 24 கருவிகள் 95 ஆம் ஆண்டு 87 கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

ஆனால் அவை இயங்க மறுத்ததையடுத்து 6 மாத காலத்தில் கொள்வனவு செய்த நிறுவனத்துக்கே மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன.

இப்படி அந்த செய்தி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(இ-150-3)

## தாராகி இடைநிறுத்தத்துக்கு பாதுகாப்பு பிரச்சினை காரணம்

மன்னார், செப். 22

காங்கேசன்துறைக்கும் மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டுவந்த 'தராகி' கப்பலின் சேவை பாதுகாப்புக் காரணங்களுக்காக சில தினங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த இக்கப்பலில் மன்னார் செல்வதற்கான பயணிகள் ஏற்றப்பட்டு பின்னர் கப்பல் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டதையடுத்து கப்பலில் இருந்து இறக்கப்பட்ட பயணிகள் நேற்றுக் காலை யாழ். நகர் வந்து சேர்ந்தனர்

இக்கப்பலின் சேவை நேற்று முதல் இரு தினங்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மன்னார் செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மீண்டும் எப்போது சேவை ஆரம்பிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தினமும் ரூ. 24 லட்சம் விழுங்கும் வெற்றிஉறுதிபடை நடவடிக்கை

வவுனியா—கிளிநொச்சி தரைப்பாதையைக் கைப்பற்ற கடந்த மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு தினமும் 24 லட்சம் ரூபா செலவாகிறது என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இந்த நடவடிக்கையில் இதுவரை படையினர் 10 டாங்கிகளையும், துருப்புக்காவி வாகனத்தையும் இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-150-3)

## வேலணையில் இரவுக் காவலாளி சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், செப். 22

இரவு காவல் கடமைக்குச் சென்ற ஒருவர் காலை துப்பாக்கிச் சூட்டுக்காயத்துடன் [illegible]

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ புனித மரியாள் வித்தியாலயம்
(O. L. R) யாழ்ப்பாணம்

1995 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய

1. செல்வி. ரி. தனேந்தினி — 157 புள்ளிகள்
2. செல்வி பி. ஜனகா — 153 புள்ளிகள்
3. செல்வி பி. ஜனனி — 146 புள்ளிகள்
4. செல்வி கே. அனுஷா — 116 புள்ளிகள்
5. செல்வி பி. ஆரணி — 115 புள்ளிகள்

மேற்படி மாணவர்களையும், அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்
பழைய மாணவர் சங்கம்
யா/ புனித மரியாள் வித்தியாலயம் (O.L.R.)

(சி-1611)

குடாநாட்டில் 'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையால்

# 350 ஹெக்ரெயர் பரப்பில் தென்னைகள் அழிவுற்றன

யாழ்ப்பாணம், செப். 22

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ''சூரியப் பிரகாசம்'' இராணுவ நடவடிக்கை காரணமாக ஏறத்தாழ 350 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் இருந்த தென்னை மரங்கள் அழிந்து போயுள்ளன.

தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. சத்தியேந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

வலிகாமம் பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் 4 ஆயிரத்து 400 ஹெக்ரயெர் நிலப்பரப்பில் தென்னை மரங்கள் இருந்தன என்றும் —

அண்மையில் எடுக்கப்பட்ட அண்ணளவான கணக்கெடுப்பின்படி தற்சமயம் 4 ஆயிரத்து 158. 5 ஹெக்ரெயர் நிலப்பரப்பிலேயே தென்னை மரங்கள் இருப்பது தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை — தென்னையைத் தாக்குகின்ற சாறு வடிதல் என்ற நோய் தற்போது வேகமாகப் பரவி வருவதாகவும் இதனைத்தடுப்பது மிகவும் அவசியமாகும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-9)

# கூட்டுறவுச் சங்கக் கணக்குகள் பரிசோதனை செய்யக் குழு!

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு விவரங்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக வெளியக எண்பார்வை செய்யப்படாது தேங்கிக் கிடக்கின்றன.

இக் கணக்குகளை எண்பார்வை செய்து கொள்வதற்காக ஓய்வு பெற்ற கூட்டுறவு உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினருடன் ஏனைய கணக்கியல் பயிற்சி பெற்றவர்களும் இணைந்து சங்கங்களின் கணக்குகளை எண்பார்வை செய்யவுள்ளனர்.

கூட்டுறவு எண்பார்வையாளர்களுக்கு குடாநாட்டில் நீண்ட காலமாகப் பற்றாக்குறை நிலவி வருகிறது. இதனைப் போக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனச் சங்கங்களின் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-86)

# துணைவேந்தரை வாழ்த்துகின்றோம்!

## யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவரின் பெற்றோர்கள் வாழ்த்துகிறார்கள்

உடுக்கை இழந்தவன் கைபோல
இடுக்கண் களைந்த துணைவேந்தர்

''நெல்லு முயிரன்றே நீரு முயரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்பது பழந்தமிழ் வாக்கு.

சிவ பூமியில் வாழும் செந்தமிழருக்கு கல்வியழகே அழகு என்பதை அறிஞர் உலகு அறியும், இடப்பெயர்வால் இன்னலுற்று மக்கள் துன்புற்ற அதேவேளை, கல்வியும் சீர்குலைந்து கற்றல் நிலை சூன்யம் அடைந்தது. அந்த உறை நிலையை நிறை நிலையாக்க நீடு உழைத்து நிம்மதி தந்த பெருமக்களில் பிதாமகர் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளையே.

விவசாய பீட மாணவர், இடத்துக்கிடம் கற்பிடம் மாற்றி கண்ணீர் வடிப்பது கண்டு பெற்றோர் இரத்தக் கண்ணீர் வடித்தனர். கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற ஊக்கத்தின் விளை நிலத்தில் விளைந்தவர்கள் யாம் என்பதை உணர்ந்து பணிக்கே தம்மை அர்ப்பணித்த நம்பிக்கை நட்சத்திரம் துணைவேந்தர். காலமறிந்து கருத்துணர்ந்து சேவை செய்ய முற்பட்டார்.

முன்வைத்த காலைப் பின் வைத்தலறியா பொன். பாலசுந்தரம்பிள்ளையவர்கள் நன்னோக்கொடு பாடுபட்டு பெற்றோர் கவலையைப் போக்கினார். மாணவச் செல்வங்களை அரவணைத்து கல்வி தடங்கலின்றித் தழைத்திட வகை செய்தார். இந்த அரும்பணி மாணவ உள்ளங்களில் மறையாது நின்று நிலவும்.

தொண்டுக்கெனத் தம்மை அர்ப்பணித்த பொன். பாலசுந்தரம்பிள்ளை, படாடோபமின்றி, மிக்க அமைதியாய் செயலாற்றுவதில் வல்லவர். அமைதிப்பண்பும், புன்னகை வதனத்துடனும் சதா விளங்கும் துணைவேந்தர் மண்ணின் பெருமைக்குரிய பிரஜையே.

தீரமுடன் போராடிய துணைவேந்தர் நீடுவாழ நிமலனை வேண்டி நிற்போமாக!

எண்ணிய முடிய வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும் என்ற வரகவிக்கு நெறிசெய்யும் பிள்ளையவர்கள் எங்கள் பெருங்கொடைப் பெரு நிதியமேயாவார்.

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களின் பெற்றோர்களாகிய நாங்கள் அவரை வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!

சி. பத்மநாதன்
[இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளரும்,
யாழ், சோதிட ஆய்வு அரங்கத்தின் உபதலைவரும்]
விவசாய பீட மாணவர்களின் பெற்றோர் சார்பாக.

[49776]


எமது வாடிக்கையாளரின் கவனத்திற்கு




எம்மிடம்

★ றோயல் றோஸ் டல்கம் பவுடர்
★ தீபா றோஸ் டல்கம் பவுடர்
★ எமல்சன் எசன்ஸ் வகைகள்
★ கலர் பவுடர் வகைகள்
★ கேக் தயாரிப்பு பொருள்கள்
★ மென்பான தயாரிப்பு பொருள்கள்
  ★ சோடா மூடி
★ பேக்கரி தயாரிப்புக்கு தேவையான பொருள்கள்
★ ஐஸ்கிறீம் தயாரிப்பு பொருள்கள்
  ★ ஐஸ்கிறீம கோண்
  ★ ஐஸ்கிறீம் குச்சி
★ இந்தியன் ஊதுபத்தி வகைகள்
★ நெய் வகைகள்
★ ஆயுள்வேத மூலிகை மருந்து சரக்கு வகைகள்




உட்பட இன்னும் பலவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(49779)



விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்.

O/L வகுப்புகளுக்குத்
தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
வினாவிடை வகுப்பு

O/L DAY CLASS (8-00 — 2-00)
EVENING CLASS (3-15 — 5-15)

இறுதிப்பிரிவு ஆரம்பம்: 24-09-97

கணிதம் திரு. தயாளன், அற்புதராஜா
விஞ்ஞானம் திரு. சுதாகர்

(49778)


# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் தம்பிராசா

(மலாயன் பென்சனியர்)

கட்டுடையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் தம்பிராசா 21-09-97 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா இராசம்மாவின் அன்புக்கணவரும். பூமணி, தவமணி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கயிலைநாதன், சிவபாலன், இராதா ஆகியோரின் அன்பு மாமனாரும். உமைபாலன். சிவராஜினி, சிவசொரூபி, சிவன்சுதன், சிவதவாணி, யாழினி ஆகியோரின் அன்புப் பேரனும், மாதங்கி, சுபாங்கி, ரேணுகா. தீபிகா. அபிசிகா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கட்டுடையில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
த. சிவசுப்பிரமணியம்.
(மகன்)

கட்டுடை,
மானிப்பாய்.

(49774)

திருமதி

## கிறேஸ் சின்னம்மா விஜயரட்னம்

(இளைப்பாறிய ஆசிரியை)

திருமதி கிறேஸ் சின்னம்மா விஜயரட்னம் 20. 09. 97 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

இவர் திரு J. N. விஜயரட்ணத்தின் அன்பு மனைவியும், மித்திரதாசன் (USA), காலஞ்சென்ற மித்திரானந்தன் மற்றும் மித்திரநேசன் (குவைத்), மித்திரறஞ்சன் (தென் இந்திய திருச்சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனறஞ்சினி (USA), இந்திரா (USA), ஜெயந்தி (குவைத்), ஜெயந்தினி (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும், செரூபினி, மைக்கேல், றமேஸ், சிவானி, கதரீன், சலோமி, ஜோசுவா, அஞ்சனா, அஞ்சுதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 22 - 09 - 97 திங்கள் காலை 10. 00 மணிக்கு வட்டுக்கோட்டையில் நடைபெற்று ஏழாலை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
வி. மித்திரறஞ்சன்.
(மகன்)

வட்டுக்கோட்டை.

(49773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை மழை பெய்ய மலேசிய அரசு உதவும்!

கோலாலம்பூர், செப். 22

சுமாத்திரா மற்றும் போர்ணியோ தீவுகளில் பரவிய பெரும் காட்டுத் தீயினால் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள இந்தோனேசியாவுக்கு உதவிகளை வழங்க மலேசியா முன்வந்துள்ளது.

காட்டுத் தீயை அணைக்கும் நடவடிக்கைக்கு 400 தீயணைப்பாளர்களை மலேசியா அங்கு அனுப்பவுள்ளது. இவர்களில் 200 பேர் கலிமன்தான் பகுதிக்கு அனுப்பப்படுவர். எஞ்சிய 200 பேரும் சுமாத்திரா தீவுக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

இந்தோனேசியாவின் கலிமன்தான் பிரதேசத்துக்கு மேலாக முகில்களைக் குவியச் செய்து அங்கு செயற்கை மழையை பொழிவிப்பதற்கும் உதவி வழங்குவதாக மலேசிய அரசு உறுதியளித்துள்ளது. (ஐ)

# ஐ.நா.பொதுச்சபைக்கூட்டத்தில் கம்போடியாவுக்கு இடம் இல்லை

நியூயோர்க், செப். 22

ஐ. நா. சபையில் கம்போடியாவுக்கான ஆசனத்தை தொடர்ந்தும் வெற்றிடமாக வைத்திருக்க ஐ. நா. பொதுச் சபைக் குழு தீர்மானித்துள்ளது.

ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இரு வெவ்வேறு குழுக்களுக்குத் தலைமை ஏற்று நியூயோர்க் செல்லவுள்ளதாக கம்போடியாவின் முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித்தும், தற்போது ஆட்சியில் உள்ள இரண்டாவது பிரதமர் ஹுன் செனும் தனித்தனியாக அறிவித்திருந்தனர்.

எதிர்வரும் புதன்கிழமை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில் தாம் உரையாற்ற வேண்டும் என்றும் அவர்கள் இருவரும் கோரியிருந்தனர். ஆயினும் கம்போடியாவுக்கான ஆசனத்தை இருவருக்கும் வழங்காமல் அதைத் தற்காலிகமாக வெற்றிடமாக வைத்திருப்பது என்று ஐ. நாவில் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விபத்தை நினைவு கூர முடியாத நிலையில் டயானாவின் காவலர்

பாரிஸ், செப், 22

இளவரசி டயானாவின் மரணத்துக்குக் காரணமான கார் விபத்தில் உயிர்தப்பிய ஒரேயொரு நபரான அவரது மெய்ப்பாதுகாவலர் ட்ரிவர் ரீஸ்ட் ஜோன்ஸ் தற்போது குணமடைந்துள்ளார். ஆனால் அந்த விபத்துச் சம்பவத்தை நினைவு கூர முடியாதவராக அவர் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பழைய சம்பவங்களை நினைவுக்குக் கொண்டு வரும் ஆற்றலை அவர் இழந்துள்ளார்.

முதற்தடவையாக பிரெஞ்சு நீதிபதி ஒருவர் வெள்ளியன்று அவரை விசாரித்தார். எனினும் விபத்து தொடர்பான விவரங்கள் எதனையும் அவரிடமிருந்து பெற முடியவில்லை. அவருக்கு தொண்டையிலும், நாக்கிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன.

டயானாவின் மரணத்துக்குக் காரணமான கார் விபத்துச் சம்பவம் தொடர்பான புதிர்களுக்கான விடையை அறிய புலனாய்வாளர்கள் இவரையே நம்பியுள்ளனர். (ஐ)

# பொருளியல் நிபுணர் சூ ரொங்ஜி சீனாவின் அடுத்த பிரதமராவார்

பீஜிங், செப். 22

சீனாவின் பிரபல பொருளியல் நிபுணரும், திட்ட வகுப்பாளரும் உதவிப் பிரதமருமான சூ ரொங்ஜி அடுத்த பிரதமராகத் தெரிவு செய்யப்படுவார் என நம்பப்படுகிறது.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மத்திய அரசியல் நிலையியல் குழுவில் 3 ஆம் இடத்தை வகிக்கும் இவர் அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் பிரதமர் தேர்வின் போது புதிய பிரதமராகும் வாய்ப்பைப் பெறவுள்ளார்.

தற்போதைய பிரதமர் லீ பெங்கின் இரண்டாவது தவணைக்காலம் எதிர்வரும் மார்ச் மாதம் முடிவடையவுள்ளது.

இதேவேளை—

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக அதிபர் ஜியாங் செமின் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்து வரும் 5 ஆண்டு கால தவணைக் காலத்துக்கு அவர் அப் பதவியில் நீடிப்பார்.

பீஜிங்கில் நடைபெற்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 15 ஆவது காங்கிரஸ் மாநாட்டில் இளம் உறுப்பினர்களையும் புதிய முகங்களையும் கொண்ட மத்திய குழு அமைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கார்ச் சாரதியின் சடலம் 20 நாள்களின்பின் அடக்கம்

பாரிஸ், செப். 22

பாரிஸில் நடந்த விபத்தில் பலியான இளவரசி டயானாவின் கார்ச் சாரதியான ஹென்றி போலின் சடலம் சம்பவம் நடந்து 20 நாள்களின் பின்னர் நேற்று முன்தினம் பிரான்ஸில் அடக்கம் செய்யப்பட்டது.

ரிட்ச் ஹொட்டேலின் பாதுகாப்பு அதிகாரியான ஹென்றி போல் மது போதையில் டயானாவின் காரைச் செலுத்திச் சென்றதாக ஆரம்ப மருத்துவப் பரிசோதனைகளில் இருந்து தெரியவந்தது.

அதனையடுத்து மேலதிக மருத்துவப் பரிசோதனைக்காக சடலத்தை அடக்கம் செய்ய புலனாய்வாளர்கள் அனுமதிக்கவில்லை.

மேலதிக மருத்துவப் பரிசோதனைகள் முடிவடைந்ததை அடுத்து பிரான்ஸில் உள்ள அவரது சொந்த ஊரில் பலத்த பாதுகாப்புடன் நடந்த இறுதி ஆராதனையின்பின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

சடலத்தை தகனம் செய்ய உறவினர்கள் விருப்பம் தெரிவித்த போது மேலதிக பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டி வரலாம் என்பதால் சடலத்தை புதைக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டனர். (ஐ)

# லண்டனில் ரயில் விபத்து

லண்டன், செப். 22

லண்டன் நகரின் மேற்குப் பகுதியில் அதிவேக பயணிகள் ரயில் ஒன்று பொருள்களை ஏற்றிச் சென்ற மற்றொரு ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஏழுபேர் உயிரிழந்தனர்; சுமார் 150 பேர்வரை காயமடைந்தனர்.

ரயில்களின் சேதமடைந்த பகுதிகளுக்குள் சிக்குண்டிருந்த பலர் அவசர மீட்புப் பணி மூலம் மீட்கப்பட்டனர். (ஐ)

# பொஸ்னியாவில் குண்டு வெடிப்பு

சரஜீவோ, செப். 22

பொஸ்னியாவின் மொஸ்டர் என்ற நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 50 பேர் வரை காயமடைந்தனர். இவர்களில் 25 பேர் மிக மோசமான காயங்களுக்கு இலக்காகினர்.

மொஸ்டர் நகரின் மேற்குப் பகுதியில் பொலீஸ் நிலையம் ஒன்றுக்கு வெளியே இப்பாரிய குண்டு வெடித்தது. இந்த நகரில் இடம் பெற்ற முதலாவது குண்டு வெடிப்புச் சம்பவம் இதுவேயாகும், (ஐ)

# வாந்தி பேதியால் 138 பேர் மரணம்

ஜகார்த்தா, செப். 22

இந்தோனேசியாவின் இரியன்ஜாயா மாகாணத்தில் பரவிய வாந்திபேதி காரணமாக குறைந்தது 138 பேர் பலியாகியுள்ளனர். கடும் மழை காரணமாக வாந்திபேதி பரவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# அதிபர் கிளின்ரன் முறைகேடாக நிதி சேகரித்தாரா?

வாஷிங்டன், செப். 22

**ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்காக அதிபர் பில் கிளின்ரன் நிதி திரட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கும் பணியை அமெரிக்க நிதி அமைச்சு ஆரம்பித்துள்ளது.**

விசாரணைகளை நடத்த சுயேச்சையான விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டுமா என்பதை நீதித்துறையினர் தீர்மானிக்கவுள்ளனர்.

தமது தேர்தல் பிரசாரத்துக்கு நிதி சேகரிக்கப்பதற்காக அதிபர் கிளின்ரன் வெள்ளை மாளிகையில் இருந்து சட்டவிரோதமான தொலைபேசித் தொடர்புகளை மேற்கொண்டாரா என்பதை நீதித்துறையினர் புலனாய்வு செய்வர் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தகைய தொலைபேசித் தொடர்புகள் எதனையும் மேற்கொண்டதாகத் தமக்கு ஞாபகம் இல்லை என்று அதிபர் கிளின்ரன் தெரிவித்துள்ளார். (ஐ)

# அடுத்தடுத்து ஆறு விமானங்களை அமெரிக்க வான் படை இழந்தது!

## கடந்த வெள்ளி இரவு மற்றொரு விபத்து

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான ''பி—''1 சுப்பசோனிக் ஜெற் விமானம் ஒன்று கடந்த வெள்ளி இரவு வீழ்ந்து நொருங்கியது. அதில் இருந்த நான்கு விமானப்படைப் பணியாளர்களும் உயிரிழந்தனர்.

மொன்ரனோவுக்கு அருகே டல்சரா என்ற இடத்தில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

உலக அரங்கில்

பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் இந்த விபத்து இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

கடந்த ஒரு வாரகாலப் பகுதியில் அமெரிக்க விமானங்கள் சம்பந்தப்பட்ட ஆறாவது விபத்துச் சம்பவம் இதுவாகும்.

பயிற்சி நடவடிக்கையின் போது அடுத்தடுத்து விமானங்கள் வீழ்ந்து நொருங்கியதைத் தொடர்ந்து அமெரிக்க விமானப்படையின் பயிற்சி நடவடிக்கைகள் கடந்த புதனன்று ஒரு நாள் இடைநிறுத்தப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனி நாடாளுமன்றம் அமைக்க

# வேல்ஸ் பிராந்தியத்திலும் வாக்கெடுப்பு வெற்றி!

பிரிட்டனில் தொழிற்கட்சி அரசாங்கத்தின் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் வேல்ஸ் பிராந்தியத்துக்கு தனியான நாடாளுமன்றத்தை அமைப்பதற்காக நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பும் வெற்றி பெற்றுள்ளது. தனியான நாடாளுமன்றம் அமைக்கப்படுவதற்கு ஆதரவாக வேல்ஸ் மக்கள் வாக்களித்துள்ளனர்.

6 ஆயிரத்து 721 வாக்குகள் வித்தியாசத்தில் இக் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது.

அபிப்பிராய வாக்கெடுப்பு வெற்றி பெற்றதை அடுத்து கடந்த 600 ஆண்டுகால சரித்திரத்தின் பின் முதன் முறையாக வேல்ஸ்ஸில் தனியான நாடாளுமன்றம் அமையவுள்ளது.

2 ஆயிரம்மாம் ஆண்டளவில் அமைக்கப்படவுள்ள இந்த நாடாளுமன்றம் வேல்ஸ் பிராந்தியத்தின் 30 லட்சம் மக்களின் நாளாந்த நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருக்கும். ஆனால் சட்டம் இயற்றவும் வரி வசூலிக்கவும் அதற்கு அதிகாரம் இருக்காது.

ஸ்கொட்லாந்து பிராந்தியத்துக்கு தனியான நாடாளுமன்றம் ஒன்றை அமைப்பதற்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பு பெரு வெற்றியீட்டியது தெரிந்ததே.

இவ்விரு வாக்கெடுப்பு முடிவுகளும் பிரதமர் ரொனி பிளயருக்கு கிடைத்துள்ள வெற்றிகளாக்கக் கணிக்கப்படுகின்றன. (ஐ)

# அல்பேனியாவில் நாடாளுமன்றுக்குள் எம்.பி மீது சூடு!

அல்பேனியாவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அவரது அரசியல் எதிரியான மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்துக்குள் வைத்து துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியுள்ளார்.

பிரதான எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரையே ஆளும் சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தினார். (ஐ)

# நிவாரணப் பணியாளர்கள் வெளியேற்றம்

தலிபான் படையினருக்கும் எதிர் கூட்டணிப் படையினருக்கும் இடையே கடும் சண்டை வெடிக்கக்கூடிய முறுகல் நிலை ஏற்பட்டிருக்கும் வடபகுதி நகரான மஸாரே ஷெரீப் நகரில் இருந்து சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் வெளியேறியுள்ளன.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பணியாளர்கள் உட்பட நிவாரண அமைப்புகளின் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் அலுவலகங்களைக் காலி செய்து விட்டனர்.

இவ்வாறு நகரை விட்டு வெளியேறிய நிவாரணப் பணியாளர்களின் பொருள்கள் சூறையாடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக் குண்டு. தொடர்பு:- 55, செட்டித்தெரு, நல்லூர். (49763)

### A / L 1997

A/L 1997 வர்த்தகம், பொருளியல், கணக்கியல் ஆகிய பாடங்களுக்கான புள்ளித் திட்டம் விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [49718]

### அக்கரைச் சீமையில்

இலங்கை - இங்கிலாந்து நாவல் 25/-, நாடகம் எழுதுவது எப்படி? என்று விளக்கிக் கூறும் முதலாவது தமிழ் நூல் 50/-. அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள். (49758)

## சந்தை திருத்த வேலை

இடைக்காடு, வளலாய், தம்பாலைச் சந்தை, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் திருத்தி அமைக்கப்படுகின்றது.

மூன்றரை லட்சம் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-11)

## விமானப்படையில் புதிதாக 439 பெண்கள்

பயிற்சியை முடித்துக் கொண்ட விமானப் படையின் பெண்கள் அணி ஒன்று விரைவில்சேவையில்இணையவுள்ளது.

439பேரைக் கொண்ட இந்த அணியினர் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-164)

## நிறுவுநர் நினைவு நாள்

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு அதிபர் சோ. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக வலி. கிழக்கு உதவி அரசாங்க அதிபரும் பிரதேச செயலருமான கதிரவேலு கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. இராஜேந்திரனும் கலந்து கொள்வர். (ஐ)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய். பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள். மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
4946 4)

## முதலாம் ஆண்டுநினைவஞ்சலி



தோற்றம்: 1939 — 04 — 19

மறைவு: 1996 — 10 — 03

### அமரர் செல்லத்துரை காங்கேயன்

(வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி)

**திதி: 1997-09-22**


அமரராகி விட்ட எமது ஆருயிரே, பாசம் என்னும் நேசக்கரத்தால் எம்மை ஆதரித்து வழிகாட்டி, உனது நற்பண்பு, நன்நடத்தையால் உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டி சிறப்புடன் நடந்த எம் அன்புத் தெய்வமே! நீர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், ஏன் ஆண்டாண்டுதான் சென்றாலும் ஆறாதையா உன் அன்பு நினைவுகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:
பாசமிகு தாய்,
சகோதரிகள், சகோதரன்,
மைத்துனர்கள், மருமக்கள்,

942, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(49771)

## முதலாண்டு நினைவஞ்சலி



அமரர்

### செல்லையா நடராஜா

(இளைப்பாறிய C. I. D. பொலீஸ் உத்தியோகத்தர்)

மலர்வு: 03-04-1928

மறைவு: 03-10-1996

பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கடமைக்கோர் எடுத்துக்காட்டாய் எம்மை வழி நடத்திய பெருந்தகையே, தந்தையே! நீங்கள் எம்மை விட்டு பிரிந்து யுகங்கள் பல சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு என்றுமே நீங்காது நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி உங்கள் பிரிவின் துயரால் வாடும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காரைநகருக்கு வெளியே உணவு எடுத்துச் செல்லத்தடை

நெடுந்தீவு, செப். 22

காரைநகர் பகுதியில் இருந்து உலர் உணவுப் பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் அட்டை ஒன்று காரைநகர் துறைமுகத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது.

காரைநகரில் உலர் உணவு நிவாரணம் பெறுவோர் அங்கிருந்து அவற்றை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்வதாகத் தெரிவிக்கப்படுவதைத் தொடர்ந்தே கடற்படையினர் இந்தத் தடையை விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஐ-111)

**PHOTO PRINT SERVICE**
**SUNIL ARTS**
272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**02-09-1997** வரை Printing செய்யக் கொடுத்த அனைத்து படங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

உங்கள் கலர்ப்படங்களை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/1610)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை**

1995, ஆண்டு 5 விசேட புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவன்

**நடேசு சுஜீவன் - 118 புள்ளிகள்.**

கற்பித்த ஆசிரியர்களுக்கும், ஊக்குவித்த பெற்றோருக்கும் வாழ்த்துக்கள்.

**அதிபர், ஆசிரியர், பா. அ. ச.**

[49755]

## பிரதிக்கு முந்துங்கள்

குறுகிய இடைவெளிக்குப் பின்
தென் இந்திய சஞ்சிகைகள்
**மாத வார இதழ்கள்**
விற்பனையாகின்றன.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பமும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 6-00) (49772)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்: 11 — 11 — 1929

ஆண்டவன் அடியில்: 09 — 08 — 1997

### அமரர் சிதம்பரம் மாரிமுத்து

(ஓய்வுபெற்ற சீ. கூ. ஊழியர்)
மாவை கலட்டி, தெல்லிப்பழை

நிழற்படமாய் நீயிருக்க நெஞ்சம் கனத்துருகுது ஐயனே! வேதனையால் துடிக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தியறிந்து எம்துக்கத்தில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் எம் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

இன்று நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

ஆறுமுகம் வீதி, கந்தரோடை.

(49764)

## ஆதரவின்றி வீதிகளில் அலையும் 20 ஆயிரம் இலங்கைச் சிறுவர்கள்

கொழும்பு, செப். 22

ஆதரவு இன்றி தன்னிச்சையாக வீதிகளில் அலையும் அநாதைச் சிறுவர்களின் மேம்பாட்டுக்காக ''லங்கா வேள்ட் விஷன்'' என்னும் அரச சார்பற்ற நிறுவனம் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இலங்கையில் தற்சமயம் சுமார் 20 ஆயிரம் அநாதைச் சிறுவர்கள் வீதிகளில் அலைந்து திரியும் நிலையில் இருப்பதாக இந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயவீர கோமன் என்பவர் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சிறுவர்கள் கல்வி வாய்ப்பு இன்றி தன்னிச்சையான போக்கால் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகியுள்ளதாகவும் இவர்களில் பலர் தொழில் நிறுவனங்களில் அடிமைகள் போன்று பயன்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் மட்டும் சுமார் 3 ஆயிரம் சிறுவர்கள் வரைவீதிகளில் அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பலர் வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக தாய் தந்தையரை, சகோதரர்களை, உறவினர்களை இழந்துள்ளவர்கள் என்பது தெரியவந்துள்ளது.

இவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்குடன் தங்குமிடங்களை அமைத்து கல்வி வசதி உட்பட சகல வசதிகளையும் வழங்க ''லங்கா வேள்ட் விஷன்'' அமைப்பு திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

### திருமலையில் கடும் வரட்சி:

## நீர் தேடி குடிமனைகளுக்குள் புகும் காட்டு மிருகங்கள்!

திருகோணமலைப் பிரதேசத்தில் கடும் வரட்சியால் காட்டு மிருகங்கள் குடிக்க நீர், உணவு இன்றி குடியிருப்புக்களுக்குள் பிரவேசிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காடுகளில் உள்ள நீர்நிலைகள் வற்றிவிட்டமையால் யானைகள், சிறுத்தைகள் என்பன கிராமங்களுக்குள் வந்து ஊர் மக்களைக் கிலி கொள்ளச் செய்வதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அண்மையில் கந்தளாயில் வெண்ராசபுரம் என்னும் இடத்தில் சிறுத்தை ஒன்று குடிமக்களின் ஆடு, மாடு, கோழிகளை பிடித்துத் தின்றதாகவும் பின்னர் அது கிணறு ஒன்றில் விழுந்து வெளியே வர முடியாமல் இறந்து போனதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த சிறுத்தைப் புலியை ஊர்வாசிகள் வெளியே எடுத்துப் பார்த்த போது அது சுமார் 6 அடி நீளமானது என்பது தெரியவந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - திருகோணமலை மாவட்ட இயற்கைக் காடுகளை இராணுவத்தினர் தமது இராணுவ நோக்கங்களுக்காக அழித்து வருவதாக விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளதாக ஏஜென்ஸி செய்தி தெரிவித்தது.

உயர் இராணுவ அதிகாரிகளும், மரக்கடத்தல் வியாபாரிகளும் இணைந்து இராணுவத் தேவைக்கென்று மரங்களை வெட்டி அவற்றை வேறு வழிகளில் விற்று இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கின்றனர் என்றும் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (ஐ-5-6)

## அரியாலையில் நெற் செய்கைக்கு ஆயத்தப் பணிகள்

அரியாலைப் பகுதியில் பெரும்போக நெற்செய்கையை மேற் கொள்வதற்கான ஆயத்த வேலைகளை இப்பகுதி மக்கள் மேற் கொண்டு வருகின்றனர்.

அரியாலை கிழக்கு நாவலடி பூம்புகார் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு இன்னும் இராணுவத்தினர் அனுமதி வழங்கவில்லை.

இதனை அடுத்து இப்பகுதி மக்கள் இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ள பகுதிகளில் நெற்செய்கையை மேற்கொள்வதற்கு வயல் நிலங்களை உழுது வருகின்றனர். (ஐ-17)

## நாரந்தனை வித்தியாலயம் இயங்குகிறது

ஊர்காவற்றுறை, நாரந்தனை கணேசா வித்தியாலயம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

மேற்படி பாடசாலையின் அதிபராக க. குமரேஸ்வரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையை அடுத்து கடந்த ஐந்து வருடங்களாக இப்பாடசாலை மூடப்பட்டுக் கிடந்தது.

# பிரெஞ்சு மருத்துவரின் சேவை மந்திகையில் நிறுத்தப்படுமா?

## நிலைமையை ஆராயக் குழு வருகிறது

நெல்லியடி, செப். 22

மந்திகை மருத்துவமனையில் சிகிச்சை பெற வரும் உள்ளக நோயாளர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகிறது. இதனால் சத்திர சிகிச்சைப் பணிகளும் அங்கு குறைந்துள்ளன. எனவே அங்கு இடம்பெற்று வரும் பிரெஞ்சு மருத்துவக் குழுவின் (எம். எஸ். எவ்.) சேவையை இடை நிறுத்தும் நிலை உருவாகி உள்ளது'

பிரெஞ்சு மருத்துவக் குழுவின் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் நிக் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மந்திகை ஆஸ்பத்திரி நிலைவரம் குறித்து அங்கு வைத்து உதயன் செய்தியாளருக்கு அவர் விளக்கமளித்தார். அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரெஞ்சு வைத்தியக் குழுவின் பாரிஸ் தலைமையகம், கொழும்பில் ஒரு தொடர்பு நிலையத்தை கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. அக்கால கட்டத்திலேயே, யாழ். மாவட்டத்தில் மந்திகை மருத்துவமனைக்கும் எமது சேவை முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த பத்து வருடகால இடைவெளியில் இங்கு எமது பல்வேறு துறைசார்ந்த சத்திர சிகிச்சை நிபுணர்களும், மயக்க மருந்து கொடுக்கும் நிபுணர்களும் ஆறு மாதத்திற்கு ஒரு தடவை மாறி மாறி சேவையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

அந்த நாள்களில் மந்திகை மருத்துவ மனையில், தினமும் 50-க்குமேற்பட்ட நோயாளிகளுக்கு சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

கடந்த மூன்று வாரகாலமாக இங்கு எமது சத்திர சிகிச்சைப் பணி குறைந்து செல்கிறது.

எமது குழு சேவையாற்றிய மன்னார், மடு, திருகோணமலை, மொனறாகலை போன்ற பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் இது போன்ற நிலைமை ஏற்பட்ட சமயங்களில் அங்கெல்லாம் எமது சேவை நிறுத்தப்பட்டது.

அதே போன்ற ஒரு நிலைமை இங்கும் ஏற்பட்டிருப்பதால் பாரிஸ் நகரிலுள்ள எமது தலைமையகம், இம்மாத இறுதியுடன் இங்கு எமது சேவையை நிறுத்தும்படி தெரிவித்துள்ளது.

இதேவேளை — இச்சேவையை மீளாய்வு செய்வதற்காக, பாரிஸ் நகரிலுள்ள எம். எஸ். எவ். தலைமையக உயரதிகாரிகளும், கொழும்பிலுள்ள தலைமையக உயரதிகாரிகளும் மந்திகைக்கு இவ்வாரம் விஜயம் செய்யவிருக்கின்றார்கள்.

இங்கு வருகை தரும் உயரதிகாரிகளின் மீளாய்வு முடிவின்படி எம். எஸ். எவ். சேவை இங்கு நிறுத்தப்பட்டால் யாழ். போதனா மருத்துவ மனையிலுள்ள எமது சத்திர சிகிச்சை நிபுணர் மந்திகை மருத்துவ மனையிலும் பகுதி நேரமாக சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வார்.

மந்திகையிலுள்ள எம். எஸ். எவ். மயக்க மருந்து நிபுணர் கடந்த வாரம் தாயகம் திரும்பியுள்ளமையால், தற்பொழுது இங்கு மகப்பேற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படுவதில்லை. கர்ப்பிணிகள் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இது ஒரு ஆபத்தான நிலைமை தான்.

வடமராட்சியில் 10 வருட சேவையை பூர்த்தியாக்கி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் நாம் தாயகம் திரும்பும்போது, எம். எஸ். எவ். சேவை இல்லையே என்று வடமராட்சி மக்களும், மந்திகை மருத்துவமனை நிர்வாகமும் பெரும் வேதனைப்படுவதை எம்மால் காண முடிகின்றது — என்று அவர் தெரிவித்தார். (ஐ-109)

## மறுபிறப்புக் கோட்பாடுகளை நம்பும் இலங்கை விஞ்ஞானி

கொழும்பு, செப். 22

மறுபிறப்பு சம்பந்தமாக தெரிவிக்கப்படும் இந்து - பௌத்த மதக் கோட்பாடுகளுக்கு விஞ்ஞான ரீதியான அடிப்படை இருப்பதாக இலங்கையின் பிரபல விஞ்ஞானி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நவீன விஞ்ஞானக் கொள்கைகளுக்கு அமைய மறுபிறப்புப் பற்றி தற்போது நன்கு விளங்கிக் கொள்ள முடிவதாக அவர் தெரிவித்தார்.

ஒருவர் இறக்கும்போது அவரது மூளையிலுள்ள உணர்வுகள் உடலை விட்டுப் பிரிகின்ற நடவடிக்கை அணுவிலிருந்து பிரிந்து செல்லும் எலக்ரோனுக்குச் சமனாகும் என்றும் —

பொருத்தமான வெற்று மூளை கிடைத்ததும் பிரிந்து செல்கின்ற அந்த உணர்வுகள் அதனுள் பிரவேசித்து செயற்படுகின்றன என்றும் — விளக்கமளிக்கின்றார் அந்த விஞ்ஞானி. (ஐ-5)

## தென்மராட்சியில் கலந்துரையாடல்கள்

அரசமைப்புச் சம்பந்தமாக விரிவான விளக்கம் அளிப்பதற்கான கலந்துரையாடல்கள் இன்றும், நாளையும் தென்மராட்சிப் பிரதேசத்தில் 521 ஆவது பிரிகேட் பிரிவுக்குள் நடத்தப்படவுள்ளன.

அரசஊழியர்கள், அரசசார்பற்ற நிறுவன தலைவர்கள், ஊழியர்கள், சமயத்தலைவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று காலை 9.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்—

மீசாலை, சரசாலை, கச்சாய், மட்டுவில், நுணாவில், சங்கத்தானை, சாவகச்சேரி ஆகிய பிரிவு மக்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும்—

தனங்களப்பு, மறவன்புலவு பகுதி மக்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4.00 மணிக்கு மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்திலும்—

கைதடி, நாவற்குழிப் பகுதி மக்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-117)

### கூ. சங்கங்களின் நிதி நெருக்கடியை நீக்க

## கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்றை அமைக்க முடிவு

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் நிதி நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இடம்பெற்ற யாழ். மாவட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடலில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன் மூலம் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் நிதியை அதன் சமாசம் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், பொதுமக்களுக்கும் கடனாக வழங்க முடியும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது போன்ற கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசங்கள் தென்னிலங்கைப் பகுதியில் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக இயங்கிவருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-117)

## வவுனியா காவலரணைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கைது!

### கைக்குண்டுகளை எடுத்துச் சென்றாராம்

கொழும்பு, செப். 22

வவுனியா பாதுகாப்பு முன்னணி வலயத்தில் கடமையாற்றும் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இரண்டு கைக்குண்டுகளும், ஆறு துப்பாக்கித் தோட்டாக்களும் இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

கடமைநேரத்தில் அவர் அனுமதி பெறாமல் வெளியேறிச் சென்றார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் களுத்துறை நீதிவான் முன்னிலையில் மேற்படி பொலீஸ் கான்ஸ்டபிள் ஆஜர் செய்யப்பட்டார். (இ-5-9)

## தென்மராட்சியில் 27 பேருக்கு வீடமைப்புக் கடன் கிடைக்கும்

தென்மராட்சி, செப். 22

வீடுகளைப் புதுப்பிக்கவும், புதிய வீடுகளை அமைக்கவும் என தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 27 பேருக்கு யாழ். மாவட்ட வீடமைப்பு அதிகார சபை தலா 20 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 5 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை நீண்ட காலக் கடனாக வழங்கவுள்ளது.

இக்கடன் தொகையை ஐந்து, பத்து, பதினைந்து வருட இடைவெளியில் மூன்று கட்டங்களில் திருப்பிச் செலுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி ஞாபகார்த்த விழாவில் உரை:

# ஆலயங்களை அரசு திருத்தாவிடின் ஆத்மீக வழியில் எதிர்ப்பு இயக்கம்

## இந்து சமயப் பேரவை விரைவில் நடத்தும்

யாழ்ப்பாணம், செப். 22

இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்ட ஆலயங்களை அரசு உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அவ்வாலயங்களைப் புனரமைக்க முடியாது என்பதனைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். இவற்றைச் செய்யத் தவறின் இந்து சமயப் பேரவை விரைவில் ஆத்மீக ரீதியான எதிர்ப்பு இயக்கங்களை ஆரம்பித்து நடத்தும்.

அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் 2 ஆவது ஞாபகார்த்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பேரவைப் செயலாளர் திரு. சி. சக்திகிரீவன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரஸ்தாப விழா கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் பேரவைத் தலைவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

பேரவைச் செயலாளர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

நமது நாட்டில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக பல இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டும் பூசையின்றிப் பூட்டப்பட்டும் கிடக்கின்றன. கீரிமலை புனித தீர்த்தத்திற்குச் சென்று பிதிர் காரியங்களைச் செய்யமுடியாதிருக்கின்றது. இதனால் இந்துக்கள் தமது வழிபாட்டுரிமையைக் கூட இழக்க வேண்டியதாகிறது.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட ஆலயங்களைப் புனரமையுங்கள். குறைந்த பட்சம் வரலாற்றுப் பெருமை மிக்க ஆலயங்களான மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம், மன்னார் திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களையாவது ஜனாதிபதி நிதியிலிருந்து புனரமைக்குமாறு ஜனாதிபதி அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். அவர்கள் எமது வேண்டுகோளைச் செவி சாய்க்கத் தவறின் நாம் நாடளாவிய ரீதியில் மாபெரும் ஆத்மீக எதிர்ப்பியக்கங்களைத் தொடக்குவோம்.

இந்நாட்டில் எமது மொழி, மத பாரம்பரிய கலை கலாசாரங்களைப்பேணவும், பாதுகாக்கவும் பூரண சுதந்திரம் பெற்றவர்கள் நாங்கள் என்பதனை நினைவுபடுத்துகின்றோம். எமது கோரிக்கைகள் மறுக்கப்படுமானால் எமது ஆத்மீக பலத்தைப் பயன்படுத்தி மாபெரும் எதிர்ப்பியக்கங்களை உருவாக்குவோம் — என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் தமது உரையில்:—

தேச சேவையே தெய்வத் தொண்டு என்று வாழ்ந்து வழிகாட்டியவர் அமரர் முத்தையா. அவர் தமது வாழ்நாளில் செய்த சமய, சமூகத் தொண்டுகளைப் பின்பற்றி நாமும் அவரைப் போன்று செயல் வீரர்களாக உழைக்கத் திட சங்கற்பம் பூண வேண்டும். தாய் - தந்தையர் இல்லாத பிள்ளைகளை எங்கள் பிள்ளைகள் என்றே அழைக்க வேண்டும் என்று சொல்வார். அவரது சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க நாம் உழைக்க வேண்டும் — என்றார்.

பேரவைத் தலைவர் அருட்கவி. சீ. விநாசித்தம்பி தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:—

தொண்டு உள்ளம் கொண்ட ஆத்மஜோதி ஐயா இன்சொல் பேசி மக்களிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டவர். சொல்லில் மட்டுமன்றிச் செயலிலும் அவர் அவ்வாறே நடந்து கொள்வார். தாம் ஏற்கும் பணிகளைச் சொந்த விடயமாகக் கருதிச் செயற்படுபடுவார். மிகப்பெரும்உள்ளம் கொண்டவர்; அவருக்குக் கோபம் வருவதில்லை. கோபம் பாவத்தைத் தேடும் என்பார். இளந் தலைமுறையினர் சமய, கலாசார ஒழுக்கங்களை கடைப்பிடிக்க அவர்களுக்குப் புத்திமதி கூற வேண்டும். நல்ல சமய சேவையாளர்களை உருவாக்கி சமய நெறி பரப்புவதற்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதில் பெரு விருப்புடையவர் — என்றார்.

பல்கலைக்கழக புறநிலை விரிவுரையாளர் பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம் ஞாபகார்த்த உரை ஆற்றினார். தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை, இந்து சமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம் ஆகியோரும் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

நாளும் தமிழிசையால்

(7ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ பாதுகாப்புடனான பஸ் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணத்துக்கும் வடமராட்சிக்கும் இடையில் நடத்தப்பட்டு வந்த இராணுவ பாதுகாப்புடனான பஸ் சேவைகள் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இராணுவ பரிசோதனைச் சாவடிகளில் நிறுத்தப்படாது விரைவாகச் செல்லக் கூடிய வகையில் இந்த இராணுவ பாதுகாப்புடனான பஸ் சேவை நடத்தப்பட்டு வந்தது.

அரச சேவையாளர்கள் ஓரளவு தாமதமின்றி தமது கடமைகளுக்குச் செல்ல இந்த பஸ் சேவை உதவியது.

இச்சேவை கடந்த வியாழக்கிழமை முதல் இடை நிறுத்தப்பட்டு சாதாரண சேவைகளே இடம்பெற்று வருகின்றன. (இ-15)

# அரசிலிருந்து விலகப்போவதாக முஸ்லிம்காங்கிரஸ்அச்சுறுத்தல்!

கொழும்பு, செப். 22

அரசு விரைவில் வெளியிடவுள்ள அதிகாரப்பரவலாக்கல் அலகில் அடங்கியுள்ள விடயங்கள் திருப்தி அளிக்காத பட்சத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இருந்து விலகிக்கொள்ளும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் பத்திரிகை அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கூறியுள்ளார்.

கொழும்பில் வெளியாகும் தமிழ் வார இதழ் ஒன்று இதனை முன்பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

அரசில் இடம்பெறுவதைவிடவும் முஸ்லிம் மக்களின் நலன்களைக் குறித்தே முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளது. என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-164)


மீண்டும் அளவெட்டியில்!

இடம்பெயர்ந்து இராமநாதன் கல்லூரியில் இயங்கிவந்த

யா/ அளவெட்டி சதானந்த வித்தியாலயம்

19-9 97 முதல் சொந்த இடத்தில் இயங்குகிறது. மாணவர்கள் அங்கு சமுகம்தரவும். 24-9-97 காலை 10 மணிக்கு பெற்றோர்கள் சமுகம் தரவும்.

அதிபர், ஆசிரியர்கள்.

(49777)

ஹோர்லிக்ஸ் தங்க பிஸ்கட் புதையல்

முதன்முறையாக தங்க பிஸ்கட்டுகளைப் பரிசாக வெல்ல இதோ ஒரு பொன்னான வாய்ப்பு. போஷாக்கிலும் தரத்திலும் தங்கமென மிளிரும் மக்கள் மனங்கவர்ந்த ஹோர்லிக்ஸ் பிஸ்கட் போஷாக்கைப் பெறும் உங்களுக்காக தங்க பிஸ்கட்டுகளைப் பரிசாக வழங்கும் அரிய வாய்ப்பினையும் தருகின்றது

இறுதிச் சீட்டிழுப்பில் தங்க ஆபரணங்கள்

மாதாந்த சீட்டிழுப்பில் தேர்ந்தெடுக்கப்படும் அதிர்ஷ்டசாலிகள் 75 பேருக்கு தங்க பிஸ்கட்டுகள் பரிசாக வழங்கப்படும் இதைத் தவிர இறுதிப் பெரும் போட்டியில் சகல போட்டியாளர்களிடையே தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பின்வரும் பரிசுகள வழங்கப்படும்.

1ம் பரிசு 25000/- ரூபா மதிப்புள்ள அழகிய தங்க நகை.

2ம் பரிசு 18000/- ரூபா மதிப்புள்ள தங்க மாலை.

3ம் பரிசு 9000/- ரூபா மதிப்புள்ள தங்க மாலை.

(இதய வடிவிலான 50 தங்கப் பதக்கங்கள் ஆறுதல் பரிசுகளாக)

வெல்வதோ மிகச் சுலபம்.

நீங்கள் செய்யவேண்டியது 100 கிராம் ஹோர்லிக்ஸ் பிஸ்கட் பக்கெட் உறைகள் 3 உடன் கீழே காணப்படும் கூப்பனையும் சரியாக நிரப்பி (கையினால் தயாரிக்கப்பட்ட கூப்பனும் ஏற்றுக்கொள்ளப்படும்) 1997 ஒக்டோபர் 31ந் திகதிக்குமுன் ஹோர்லிக்ஸ் தங்க பிஸ்கட் புதையல் த.பெ. எண் 1890, கொழும்பு. என்ற முகவரிக்கு அனுப்பிவைப்பது மட்டுமே

கூப்பன்

எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான கனியுப்பு ஒன்றுக்கு ஹோர்லிக்ஸ் பிஸ்கட் பிரசித்தி பெற்றது அக்கனியுப்பு எது?

விடை : ....................

பெயர் : ....................

முகவரி : ....................

இத்துடன் 100 கிராம் ஹோர்லிக்ஸ் பிஸ்கட் பக்கெட் உறைகள் 3ஐ இணைத்துள்ளதுடன் போட்டி சட்ட திட்டங்களுக்கு இணங்குகிறேன்.

(பிஸ்கட் பக்கெட் உறைகள் 3 இணைக்காத கூப்பன்கள் செல்லுபடியாகாது) கையொப்பம்

Mel Ads License No: C/54/97

போட்டி 1997 ஒக்டோபர் 31 வரை மட்டுமே செல்லுபடியாகும். ஸ்மித்க்ளைன் பீச்சம் மக்வூட்ஸ் லிமிட்டெட் மற்றும் மெல் அட்ஸ் லிமிட்டெட் நிறுவனங்களின் ஊழியர்களும் அவர்களின் உறவினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

ஹோர்லிக்ஸ் வழங்கும் செறிவான போஷாக்கு. இப்போது கல்சியம் நிறைந்த பிஸ்கட்டுகளாக

சந்தைப்படுத்துவோர்

SB

ஸ்மித்க்ளின் பீச்சம் மக்ஃவூட்ஸ் லிமிட்டெட்

நீங்களும் இப் போட்டியில் கலந்து கொண்டு, மாபெரும் பரிசுகளை வெல்லுங்கள்!

[47960]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொதியில் விழுமா மோதலின் பொறி?

அரசாங்கம் தென்னிலங்கையில் இப்போது மிகப் பரந்த அளவில் பிரசாரம் செய்து வருகிறது. இந்தப் பிரசாரம் சமாதான இயக்கம் என்று அழைக்கப்படுகிறது. கருத்தரங்குகள், வீடியோப் படக்காட்சிகள், ஊர்திகளின் பவனி, தெருக் கூத்துக்கள் என்று வெவ்வேறு வடிவங்களில் சமாதான இயக்கப் பிரசாரம் நாள் தவறாமல் தெற்கின் மூலை முடுக்கெங்கும் நடத்தப்படுகிறது.

அரசமைப்புத் திருத்தம் — அதிகாரப் பரவல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாத பட்சத்தில், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, மக்கள் ஆதரவுடன் அதனை நிறைவேற்ற ஜனாதிபதி முடிவு செய்திருக்கிறார். சர்வஜன வாக்கெடுப்பில் வெற்றி பெறுவதற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதே சமாதான இயக்கப் பிரசாரத்தின் முழு நோக்கமும்.

தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் புதிய அரசமைப்பு — அதிகாரப் பரவல் குறித்து மக்களுக்கு விளக்கப்படுகிறது. பல இடங்களிலும் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

அரசாங்கத்தின் பிரசாரம் இவ்வாறு தீவிரம் அடைந்திருக்கும் வேளையில், சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை, கடந்த வாரம் சுப நேரம் பார்த்துத் தடபுடலாக வெளியிட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் சிபார்சுகள் எதிர்பார்த்தது போலவே அரசின் தீர்வு முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பதாக உள்ளன. அறிக்கை வெளியிடப்பட்ட வேளை பௌத்த பீடாதிபதிகள், பிரபல தேரர்கள் ம்ற்றும் பிரமுகர்கள் ஆற்றிய உரைகளும் வழமை போலவே, இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தமானது; பெரும்பான்மையினரான அவர்களுக்கு அடுத்த இரண்டாம் தரப் பிரஜைகளாகவே தமிழர்கள், முஸ்லிம்கள் வாழ வேண்டும் என்பதனை வலியுறுத்தின. குறிப்பிட்ட அறிக்கை வெளியீட்டு விழாவில் அத்தகைய பேரினவாதம் கக்கப்படும் என்பதும் அனேகமாக எதிர்பார்த்ததே.

இவை எல்லாவற்றையும் விட மோசமானது, அரசமைப்புச் சீர்திருத்தம், உத்தேச தீர்வு யோசனை என்பனவற்றுக்கு பௌத்த மகா சங்கத்தின் அங்கீகாரத்தை அரசு பெற வேண்டும் என்ற முடிவாகும்! தமது அங்கீகாரம் இன்றி அரசின் இரு விடயங்களும் செயலாகக் கூடாது என்று போராட்டம் நடத்துவது என்றும் பௌத்த பிக்குமார் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். இது நாட்டின் அரசியலை அடித்துக் கலக்கி சேறும் சகதியுமாக்கி விடும் என்பது மட்டும் நிச்சயம்!

அரசாங்கம் தனது அரசமைப்புச் சீர்திருத்தம் — அதிகாரப் பரவல் திட்டங்களுக்கு மக்கள் மத்தியில் ஒரு முனையில் பிரசாரம் செய்ய —

இவை இரண்டினையும் மகா சங்கத்தின் அங்கீகாரம் பெறாமல் நிறைவேற்றக் கூடாது என்று பிக்குமார் மறுமுனையில் போராட்டம் நடத்த —

பௌத்த குருமார், அரசியல்வாதிகள் ஆகிய இருதரப்பினரில், மக்கள் ஆதரவும் செல்வாக்கும், யாருக்கு அதிகம் உண்டு என்ற போட்டி நிலை உருவாகி இரண்டு தரப்பும் முட்டி மோத —

அந்த மோதலில் இருந்து சிதறும் பொறியில் இருந்து மூளும் தீயில் தீர்வுப் பொதி பொசுங்கிவிடும் ஆபத்துத் தோன்றியுள்ளது. அதனைத் தடுக்க முடியுமா, என்ன?

# வவுனியா - கொழும்பு இரவு ரயில் பயணிகளிடம் நகை, பணம் பறிப்பு

கொழும்பு, செப். 22

வவுனியாவில் இருந்து கொழும்புக்கும் கொழும்பிலிருந்துவவுனியாவுக்கும் செல்லும் இரவு ரயில் பயணிகளிடம் இருந்து நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட குழு ஒன்று நகைகளையும், பணத்தையும் பறிமுதல் செய்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவினர் பொலீஸ் அதிகாரிகள் போல் நடித்து குறிப்பிட்ட ஒரு ரயில் நிலையத்தில் பயணிகளை இறக்கி ஆயுத முனையில் பயமுறுத்தி நகைகளையும், பணத்தையும் பறிமுதல் செய்து வருகின்றார்கள் என்று கூறப்படுகின்றது.

இதே சமயம் நேற்று முன்தினம் இரவு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு வவுனியாவைச் சேர்ந்த ராஜகோபால்சாமி என்பவர் 40 ஆயிரம் ரூபாவை இழந்தார். கறுப்பு நிற ஜீப்பில் வந்தவர்கள் தம்மை பயமுறுத்தி பணத்தை பறித்ததாக அவர் தெரிவித்துள்ளார். (இ-9)

## கப்பல் சேவை நாளை இல்லை

யாழ்ப்பாணம், செப். 22

காங்கேசன்துறைக்கும், மன்னாருக்கும் இடையில் நாளை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட பயணிகள் கப்பல் சேவை நடைபெற மாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## சிறுவர் தினத்தை ஒட்டி
## சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் சுவரொட்டிப்போட்டி

தென்மராட்சி, செப். 22

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்விக் கோட்டத்திலுள்ள ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த 13 வயதுக்கு உட்பட்ட மாணவரிடையே ''ஒற்றுமையான உலகம்'' என்னும் தலைப்பிலான சுவரொட்டிப் போட்டியினை நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி லயன்ஸ் கழக மட்டத்தில் நடைபெறும் இப்போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் சுவரொட்டிகள் யாழ். மாவட்ட லயன்ஸ் 306 பி கழகத்தினால் நடத்தப்படவுள்ள மாவட்ட மட்ட போட்டிக்கு அனுப்பப்படுமென சாவகச்சேரி லயன்ஸ் கழக கல்விச் சேவைப்பிரிவுத் தலைவர் லயன்ஸ் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஐ-117)

## யாழ். ஆஸ்பத்திரியில்
## உளநோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு 4 அறைகள் அமைக்க உதவி

யாழ்ப்பாணம், செப். 22

யாழ். போதனா வைத்திய சாலையில் உளநலத்துறைப் பிரிவுக்கு, மனநோயாளர்களை தனித்தனியாக சந்தித்து சிகிச்சையளிப்பதற்கென நான்கு அறைகள் (கவுன்ஸலிங் ரூம்) அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

யாழ். போதனா வைத்திய சாலைப்பணிப்பாளர் செல்வி என். கனகரட்ணத்தின் வேண்டுகோளுக்கமைய மேற்படி அறைகளை அமைப்பதற்கென 40 ஆயிரம் ரூபாவை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் ஒதுக்கியுள்ளது. (ஐ-5-9)

## வலி. வடக்கு மக்களுக்கு வாளிகள், மண்வெட்டிகள்
### புனர்வாழ்வுக் கழகம் வழங்கும்

வலி. வடக்கில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வாளி, மண்வெட்டி போன்ற அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மீளக்குடியமர்ந்த 567 குடும்பங்களுக்கு இத்தகைய பொருள்களை வழங்கவென எட்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும்—

அனேகமாக இந்த வாரம் பொருள்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் - நிறுவனத்தின் உப.தலைவர் ஏ. நல்லதம்பி தெரிவித்தார்.

## ஒருநாள் கோழிக் குஞ்சுகள் வடமராட்சியில் வழங்கப்படும்

திருநெல்வேலி, செப். 22

வடமராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட ஒருநாள் ''பிரிமா'' இன கோழிக் குஞ்சுகள் திங்கட்கிழமை வடமராட்சி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

கோழிக்குஞ்சு வளர்ப்புக்குத் தேவைப்படும் இரத்தக் கழிச்சல், சளி ஆகிய நோய்களுக்கான மருந்து வகைகளும் பூச்சி கொல்லி மருந்துகளும் இப்பணிமனையில் பெற்றுக்கொள்ள முடியும் என்று யாழ். கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் திருமதி புனிதவதி தங்கராஜா தெரிவித்தார். [ஐ-135

## மாகியப்பிட்டி பகுதியில் தேடுதல்

மாகியப்பிட்டிப் பகுதியில் படையினர் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட தேடுதலின் போது ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், சேதமடைந்த ஆர்.பி.ஜி. ஒன்று உட்படப் பல ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு குடிசை, குடி தண்ணீர் வசதி
### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதி உதவி

யாழ்ப்பாணம், செப்.22

மயிலிட்டி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து மீண்டும் அங்கு குடியேற முடியாமல் உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு குடிசைகளை அமைக்கவும், குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நிதி ஒதுக்கியுள்ளது.

நிறுவனத்தின் உபதலைவர் அ.நல்லதம்பி இத்தகவலைத் தெரிவித்தார்.

மயிலிட்டி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் இம்மக்களுக்கு அரசநிறுவனங்கள் எதுவித உதவிகளையும் வழங்க முன்வராததை பிரதேச செயலர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்து தமது நிறுவனம் அந்த மக்களுக்கு உதவி வழங்க முன்வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 10 முகாம்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு அவர்களது குடிசைகளை புனரமைக்க சுமார் 3லட்சத்து 50ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு 5 குழாய்க் கிணறுகளை அமைக்க ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும்—

திறந்த கிணறு ஒன்றைப் புனரமைக்க 15ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு சில வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

உடுவில் அண்ணா நகர்ப் பகுதியில் மூன்று பொதுக் கிணறுகளை அமைக்க 3 லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றைவிட சங்கானை பிரதேச செயலர் பிரிவில் எட்டு குடிசைகளும், 2மலசல கூடங்களும் அமைக்கப்படும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 8ஆயிரத்து 500ரூபா செலவில் 114 குடிசைகளும் 5லட்சம்ரூபா செலவில் 5பொதுக் கிணறுகளும் விரைவில் அமைக்கப்படவுள்ளன. (ஐ-9-5)

## யாழ். குருத்துவக் கல்லூரி அடுத்த மாதம்முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், செப்.22

கொழும்புத் துறையிலுள்ள சென். பிரான்சிஸ் சேவியர் குருத்துவக்கல்லூரி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் அதன் பழைய இடத்தில் மீண்டும் இயங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக 51ஆவது படையணியின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 1995 ஆம் ஆண்டு இக் குருத்துவக் கல்லூரி தற்காலிகமாக மிருசுவிலில் இயங்கியது. பின்னர் மிருசுவிலிலிருந்து கிளிநொச்சிக்கும் இறுதியாக மன்னார், மடு தேவாலயத்துக்கும் மாற்றப்பட்டு அங்கு இயங்கி வந்தது.

இக் குருத்துவக் கல்லூரிக்கு சொந்தமான வீட்டுத்தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், பயிற்சிபெறும் அருட்சகோதரர்களின் பொருள்கள் மற்றும் குருத்துவக் கல்லூரிக்குச் சொந்தமான ஏனைய பொருள்கள் என்பன 51 ஆவது படையணியின் அனுசரணையோடு கடந்த 16 ஆம் திகதி மன்னாரிலிருந்து யாழ். கல்முனை துறைக்கு எடுத்துவரப்பட்டன.

பின்னர் அவை அங்கிருந்து இயந்திரப் படகுகள் மூலம் குருநகர் இறங்குதுறைக்கு கொண்டுவரப்பட்டு, லொறிகள் மூலம் குருத்துவக் கல்லூரிக்கு கொண்டு சேர்க்கப்பட்டன —என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு வருடங்களாக இக் குருத்துவக் கல்லூரியில் கற்கும் அருட் சகோதரர்கள் 42 பேருக்கும் அடுத்த மாதம் முதல் பாடவிதானங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும்—

இதற்காக முழு ஆதரவு நல்கிய இராணுவத்துக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும்— குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருட் தந்தை ஜேக்கப் நிக்கலஸ் தெரிவித்துள்ளார். (ஐ-5-6)

## ஆலயங்...

(நான்காம் பக்க தொடர்)

பஜனை செய்யும் சாவகச்சேரி வித்தகம் யோகியார் சின்னத்தம்பி, நல்லூர்க் கந்தசாமி கோயில் பஜனைக் குழுத்தலைவர் திரு. இ. கருணாகரன் ஆகியோரின் தொண்டைப் பாராட்டிப் பேரவைத் தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

முதுபெரும் பத்திரிகையாளரான எஸ். பெருமாளும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். [அ-30]

## வெளிஇடங்களில் பிடிக்கும் மீனை குருநகரில் விற்கத் தடை

குருநகர், செப்.22

குருநகர்ப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்வகைகள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருந்து வரும் மீன் வகைகளை குருநகர் பொதுச் சந்தையில் விற்பனை செய்வது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டிருப்பதாக குருநகர் மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

குருநகர்ப்பகுதி மீனவர்கள் தற்போது பகலில் மட்டுமே மீன் பிடிக்கச் செல்வதால் அவர்கள் தொழில் முடித்து கரை திரும்ப நீண்ட நேரம் எடுக்கிறது.

தினமும் அவர்கள் தாமதமாகக் கரை திரும்புவதால் தாம் பிடித்த மீன் வகைகளை குருநகர் பொதுச்சந்தையில் உரிய நேரத்தில் சந்தைப்படுத்த அவர்களால் முடிவதில்லை.

அவர்கள் கரை சேர்வதற்கு முன்னதாக ஏனைய பகுதிகளில் பிடிக்கப்படும் மீன் வகைகள் குருநகர் பொதுச் சந்தையில் விற்பனைக்கு வந்து விடுகின்றன.

இதனால் குருநகர்ப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுவது குறித்து சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே வெளியிடங்களில் இருந்து வரும் மீன் வகைகளை குருநகர் சந்தையில் விற்பதற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டிருப்பதாக மீனவர் சங்கங்களின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-51)

## நாளை

புரட்டாதி 7

செவ்வாய்க்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 12.56 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பின் இரவு 12 55 வரை.

மஹாவிய தீ பாதம்

மத்தியாஷ்டமி

சுபநேரம்: 10.32-12 02

ராகுகாலம்: 3 02-4 32

(பகலுக்கும் இரவுக்கும் பொதுவான தோஷம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள ஆணைக்குழு அறிக்கை தமிழ்த் தலைவர்கள் கண்டனம்

கொழும்பு, செப். 22

அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் தீர்வு யோசனைகள் நாட்டைப் பிளவுபடுத்தும் என்று சிங்கள ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்து இருப்பதை பல தமிழ்க் கட்சித் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி எடுக்கப்படும் போதெல்லாம் அதனைக் குழப்புவதற்கு சிங்கள பேரினவாதக் கட்சிகள் முயற்சி எடுத்திருக்கின்றனர் என்றும்—

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சி எடுத்துள்ள இந்த வேளையில், சிங்கள ஆணைக்குழு, சிங்கள மக்களைத் தூண்டிவிடும் நோக்கில் இந்த இடைக்கால அறிக்கையை விடுத்துள்ளது என்றும் தமிழ்த் தலைவர்களான எஸ். தொண்டமான், எம். சிவசிதம்பரம், டக்ளஸ் தேவானந்தா, த. சித்தார்த்தன் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ-3)

### வணக்கஸ்தலங்களுக்குச் செல்ல

# விசேட தினங்களிலாவது அனுமதிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

''முக்கிய வணக்க ஸ்தலங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில், மன்னார் திருக்கேதீஸ்வரம் கோயில் ஆகியவற்றுக்கு விசேட தினங்களிலாவது பக்தர்கள் சென்று வர அனுமதிக்க வேண்டும்.''

மேற்கண்டவாறு வடமாகாண மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபை ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

படையினரின் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இந்த ஆலயங்கள் அமைந்துள்ளபடியால் பக்தர்கள் சென்று வழிபட முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால நடவடிக்கைகளால் 700 இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன என்றும்—

அவற்றில் முக்கியமான ஆலயங்களை திருத்தி அமைப்பதன் மூலம் இந்துக்களின் வரவேற்பைப் பெறலாம் என்றும் — மீள்குடியமர்வு அதிகார சபையால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21-3)

# சிற்றூர்திச் சேவைச் சங்க ஒன்றியம் அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைகளின் ஒன்றியம் ஒன்று நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதில் கலந்து கொண்ட ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா சிறப்புரையாற்றினார்.

கடந்த காலங்களில் அரச போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்த வேளையில் தனியார் போக்குவரத்துச் சேவையினர் குடாநாட்டு மக்களுக்கு வழங்கிய அளப்பரிய சேவையை எளிதில் மறந்துவிட முடியாது.

யுத்த அனர்த்தங்களினால் மக்களின் இடப்பெயர்வை அடுத்து போக்குவரத்துச் சேவையும் சீர்குலைந்தது. இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் போக்குவரத்துச் சபை பஸ்களின் எண்ணிக்கை குடாநாட்டு மக்களின் தேவைக்குப் போதுமானதல்ல. எனவே மக்களின் போக்குவரத்துச் சேவையைத் திறம்பட நடத்தவே இந்த ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றோம்.

அத்துடன் தொழிற்சங்க வெகுசன அமைப்புக்களையும் புனரமைப்பு செய்து வருகின்றோம். விரைவில் இந்த அமைப்புக்களை உள்ளடக்கிய கூட்டமைப்பு ஒன்றையும் உருவாக்க எண்ணியுள்ளோம் என்றார். (இ-9)

### விஜயபாலமெண்டிஸின்

# குடியுரிமை பறிக்கும்பிரேரணை: சிறிமாவோ சமர்ப்பிப்பார்!

முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸின் குடியுரிமையைப் பறிக்கும் பிரேரணையை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது சமர்ப்பிக்கவிருக்கிறார்.

இந்தப் பிரேரணையை சமர்ப்பிக்க பிரதமர் மறுத்து வந்தபோதும், ஏனையோரின் வற்புறுத்தல்களையடுத்து இந்தப் பிரேரணையில் அவர் கைச்சாத்திட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-150-3)

# கட்டாக்காலிகளை பிடிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 22

காலபோக நெற் செய்கையைக் கருத்தில் கொண்டு, கட்டாக்காலிக் கால் நடைகள் தொடர்பாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக நவாலி விவசாய சம்மேளனச் செயலாளர் எஸ். ரமேஷ் தெரிவித்தார்.

நவாலி விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்ட பெரும்பாலான விவசாயிகள் விதைப்பு வேலைகள் ஆரம்பித்துள்ளமையினால், நெற்பயிரை அழிவின்றிப் பாதுகாக்கும் பொருட்டே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அவர் கூறினார். (இ-15)

# புத்தக கண்காட்சியும் கருத்தரங்கும்

திருநெல்வேலி, செப். 22

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டுவிழா கருத்தரங்கும், புத்தகக் கண்காட்சியும் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம் தலைமையில் நடைபெற்றன.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (இ-135)

# வவுனியாவில் மேல் நீதிமன்றம்

கொழும்பு, செப். 22

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மேல் நீதிமன்றம் இன்று திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவிருக்கிறது.

வவுனியா நீதிமன்ற கட்டடத் தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி நீதிமன்றத்தை சட்டமா அதிபர் சரத் என். சில்வா அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். (இ-3)

## அதிகாரப்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் அன்று வெளியாகும் என்றும் — நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

பெரும்பாலும் அடுத்த மாதம் 14 ஆம் திகதி அதிகாரப்பரவலாக்கல் யோசனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை — பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் புதிய ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) தவிர்ந்த ஏனைய தோழமைக் கட்சிகள் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளுக்கு பூரண ஆதரவு தெரிவித்துள்ளன என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி விசேடமாகக் கூடவிருக்கும் அமைச்சரவைக் கூட்டத்தில் சகல அமைச்சர்களையும் சமுகமளிக்குமாறும்—

தமது கருத்துக்களை அமைச்சர்கள் தெரிவிக்கலாம் என்றும்— அவர் கேட்டுக் கொண்டார். (இ-3-21-150)

## உலர் உணவு...

(முதலாம் பக்கத் தொடர்)

66 ஆயிரத்து 95 பேர் நிவாரணம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் 3 லட்சத்து 3 ஆயிரத்து 409 பேரும்—

கிளிநொச்சியில் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 287 பேரும்—

முல்லைத்தீவில் 95 ஆயிரத்து 332 பேரும்—

மன்னாரில் 70 ஆயிரத்து 928 பேரும்—

வவுனியாவில் 36 ஆயிரத்து 950 பேரும் — நிவாரணம் பெற்று வருகின்றனர்.

(இ-21-150)

# மெய்வன்மை பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

யாழ்ப்பாணம், செப். 22

மெய்வன்மைச் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரைத் தெரிவு செய்வதற்கான பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9-00 மணி முதல் நடைபெறும் என ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்க வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் இப்பரீட்சைக்கான பரீட்சை மண்டபம் ஒன்று அமைய உள்ளது. இங்கு 180 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். (உ)

# பத்மநாதனின் மனு இன்று விசாரணை

முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை சட்ட விரோதமானது எனக் கோரும் அடிப்படை உரிமை மனு தொடர்பான விசாரணைகள் இன்று உயர் நீதிமன்றத்தில் இடம் பெறவுள்ளன.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு உதவினார், உடந்தையாக இருந்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சீ. ஐ. டி. யின் உத்தரவின்படி பத்மநாதன் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருப்பது தெரிந்ததே. (இ-5)

### தொடரும் யுத்தத்தினால்

# எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பெரும் அளவு பாதிப்பு

கொழும்பு, செப். 22

''பல வருடங்களாகத் தொடரும் யுத்தத்தினால் தமிழ், சிங்கள எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் யுத்தம் காரணமாகப் பாதுகாப்பின்றி வாழ்ந்து வருகின்றனர்.''

பி.பி.ஸி. சிங்கள சேவையின் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பிரதிநிதிகளை கொழும்பில் சந்தித்து அவர் உரையாடினார்.

தொடரும் யுத்தத்தால் விவசாயம், மீன்பிடித்தொழில் என்பன பாதிக்கப்பட்டிருப்பதாகவும், எவ்வேளையிலும் யாராலும் ஆபத்து வரலாம் என்ற பயத்துடன் மக்கள் வாழ்ந்து வருவதாகவும் யுத்தத்தை நிறுத்தி சமாதானமாக வாழவே மக்கள் விரும்புகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-6)

## வேலணையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த நாகராசா ஆனந்தராசா (வயது 23) என்பவரே உயிரிழந்தவராவார்.

வேலணை பாடசாலை ஒன்றில் காவலாளியாகக் கடமையாற்றும் இவர் நேற்று முன்தினம் மாலை இரவுக் கடமைக்குச் சென்றதாகவும்—

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமாகியுள்ளார் என நேற்றுக்காலை அறிந்ததாகவும்— இறந்தவரின் உறவினரால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் ஊர்காவற்றுறைப் பொலீஸாரால் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் வலது கண் பக்கம் (கண் உட்பட) துப்பாக்கிச் சூட்டினால் சிதறுண்டு காணப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ-15)

# 5 புலிகள் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, செப். 22

புளியங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

இம்மோதலில் தமது தரப்பில் கப்டன் அலெக்ஸி (செல்லையா ரோகினி — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் நந்தினி (இராசதுரை புஸ்பமலர் — புதுக்குடியிருப்பு), லெப்டினன்ட் எழினி (யோகராசா உமா — மட்டக்களப்பு), லெப்டினன்ட் லக்ஷி (சுப்பிரமணியம் ரதி — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் பூபதி (யாழ்ப்பாணம்) ஆகியோர் களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (இ-164-3)

# வழுக்கியாற்று பாலம்

யாழ்ப்பாணம், செப். 22

நவாலி வழுக்கியாற்றுப் பாலம் உடைந்து சேதமடைந்து இரண்டு வருடங்களாகியும் திருத்தப்படாத நிலையில் உள்ளது. (இ-15)

## தராகி...

(முதலாம் பக்கத் தொடர்)

கும் என தெரிவிக்கப்படவில்லை.

அதேநேரம் — நேற்று முன்தினம் காலியில் இருந்து புறப்பட்ட ''குட்வில் கைட்'' கப்பல் நேற்று காங்கேசன் துறைக்கு வந்து சேரவிருந்தது.

ஆனால் கப்பல் வந்து சேர்ந்தமை குறித்து நேற்றிரவு வரை தகவல் கிடைக்கவில்லை. (இ-3-150)

## சீனக் கப்பல்..

(முதலாம் பக்கத் தொடர்)

இக்கப்பலை மீட்க கொழும்பில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட ''ஸில்க் ரூட்'' என்னும் இழுவைப்படகின் முயற்சி தோல்வியில் முடிவடைந்ததையடுத்து இழுவைப்படகு கொழும்பு திரும்பி விட்டது.

கப்பலை மீட்கும் முயற்சி கைவிடப்பட்டதையடுத்து கப்பலின் சீனநாட்டு சிப்பந்திகளை அந்நாட்டுக்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'' 16 வருட யுத்தத்தின் ஞாபகச் சின்னமாக இக்கப்பல் இருக்கும்'' என்று கப்பல் மூழ்கிய விவகாரத்தை கொழும்பு பத்திரிகைகள் வர்ணித்துள்ளன. (இ-150-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22- 09 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org